செய்தி வெளியீடு எண்:849 நாள்: 11.10.2008

# செய்தி வெளியீடு

## தொழிற்சாலைகளில் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி அதிக விலை டீசல் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஊக்கமளிக்கும் வகையில் இந்த டீசல் மீதான மதிப்புக் கூட்டு வரியை திருப்பியளிக்க முதலமைச்சர் கலைஞர் ஆணை

---

உச்ச அளவில் மின் தேவை இருக்கும் மாலை நேரங்களில் தொழிற்சாலைகள் தங்கள் சொந்த ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி அதிக விலை டீசல் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஊக்கமளிக்கும் வகையில் இந்த டீசல் மீதான மதிப்புக் கூட்டு வரியை திருப்பியளிக்க முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாலை நேரங்களில் 6 மணி முதல் 10 மணி வரை வீடுகளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்க வகை செய்யும் வகையில் இந்த நேரங்களில் பெரிய தொழிற்சாலைகள் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மின்சாரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று அண்மையில் ஆணையிடப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், பெருந் தொழிற்சாலைகளின் உற்பத்தி பாதிக்காத வகையில் அவர்களுக்கு உதவும் பொருட்டு அவர்கள் வைத்துள்ள ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய ஏதுவாக தேவையான டீசல் வழங்குவது குறித்து எண்ணெய் நிறுவனங்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியதின் காரணமாக தொழிற்சாலைகளுக்குத் தேவையான கூடுதல் டீசலை எண்ணெய் நிறுவனங்கள் மூலம் வழங்க மத்திய அரசு அறிவுரை வழங்கியுள்ளது. இந்த டீசல் மதிப்புக் கூட்டு வரியும் சேர்த்து லிட்டர் ஒன்றுக்கு சுமார் 50 ரூபாய் என்றுள்ளது.

தற்போது பெட்ரோல் பங்க்குகளில் விற்கப்படும் டீசலின் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 37.13 என்று உள்ள நிலையில், அதிக விலை டீசலை மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுத்தும் பெரிய தொழிற்சாலைகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், இந்த டீசலின் மீதான மதிப்புக் கூட்டு வரியை தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் திருப்பியளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.